**செய்தி வெளியீடு எண்:359** **நாள் : 21.07.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.7.2015 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஜெயில்பேட்டையில் 15 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 66 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 38 கோடியே 81 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் மற்றும் மத்திய வருவாய் பிரிவு வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சென்னை, கோயம்பேடு உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகம் மற்றும் சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் கூடுதல் இரண்டடுக்கு தாழ்தள வாகன நிறுத்தும் வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்து, சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செரியன் நகர் பகுதியில் எண்ணூர் – மணலி துறைமுக சாலை விரிவாக்கத்தின் காரணமாக இடம் பெயர்கின்ற 94 குடும்பங்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அரங்கநாதபுரம் திட்டப்பகுதியில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளையும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 18 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மறு குடியமர்வு இழப்பீட்டுத் தொகையினையும் வழங்குவதன் அடையாளமாக 5 குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளையும், இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் நோக்கிலும் தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தேவைக்கேற்ப குடியிருப்பு மற்றும் வீட்டு வசதி உருவாக்கம் செய்யும் பல்வேறு திட்டங்களையும், தமிழகத்தின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அடிப்படை

வசதிகள் இன்றி வாழும் நலிவுற்ற ஏழை எளிய மக்களின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்த, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் பல்வேறு குடிசைப் பகுதி மேம்பாடு, மறுகுடியமர்வு திட்டப் பணிகள், வேலைவாய்ப்பு பயிற்சி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஜெயில்பேட்டையில் 15 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 393 சதுர அடி கட்டட பரப்பளவில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கையறை, சமையலறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசியில் 5 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 144 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; இராமநாதபுரம் மாவட்டம் – பட்டினம்காத்தானில் 12 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 144 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூரில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 112 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; தஞ்சாவூர் மாவட்டம் – தஞ்சாவூர், பிள்ளையார்பட்டி பகுதி–2ல் 18 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 304 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம், ஆணையூரில் 9 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 176 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; திருப்பூர் மாவட்டம் – பல்லடம், அறிவொளி நகரில் 14 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

என மொத்தம் 82 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 1424 அடுக்குமாடிக் குடியிருப்புகளை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் – தஞ்சாவூர், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பின்புறம் 16 கோடியே 90 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 29 உயர் வருவாய் பிரிவு தனி வீடுகள் மற்றும் 55 மத்திய வருவாய் பிரிவு தனி வீடுகள்;

சென்னை – மகாகவி பாரதி நகரில் தூண் தளம் மற்றும் நான்கு தளங்களுடன், ஒவ்வொரு குடியிருப்பும் 757 சதுர அடி முதல் 907 சதுர அடி கட்டட பரப்பளவில், இரண்டு படுக்கையறை, கூடம், சமையலறை உள்ளிட்ட வசதிகளுடன் மொத்தம் 12 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 56 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

வேலூர் மாவட்டம் – காட்பாடி வட்டம், தாரப்படவேடு கிராமத்தில் 9 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 47 உயர் வருவாய் பிரிவு தனி வீடுகள் மற்றும் 3 மத்திய வருவாய் பிரிவு தனி வீடுகள்;

என மொத்தம் 38 கோடியே 81 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள உயர் மற்றும் மத்திய வருவாய் பிரிவு வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னை, கோயம்பேட்டில் 2,67,127 சதுர அடி கட்டட பரப்பளவில், கான்கிரீட் சாலைகள், கழிவறைகள், குடிநீர் வசதிகள், மழைநீர் வடிகால் வசதிகள், மின்வசதி, தீயணைப்பு வசதி, சரக்குந்து நிறுத்தும் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 492 கடைகளுடன் கூடிய உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகம்;

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கோயம்பேடு – சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் 1,01,762 சதுர அடி கட்டட பரப்பளவில், சுமார் 2500 இருசக்கர வாகனங்கள், 50 கார்கள் நிறுத்தும் வகையில் நவீன முறையிலான தீயணைப்பு வசதி,

கண்காணிப்பு கேமராக்கள் போன்ற வசதிகளுடன் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் இரண்டடுக்கு தாழ்தள வாகன நிறுத்தும் வளாகம்;

என மொத்தம் 89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகம் மற்றும் கூடுதல் இரண்டடுக்கு தாழ்தள வாகன நிறுத்தும் வளாகம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் சார்பில் திறந்தும், துவக்கியும் வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 210 கோடியே 59 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் ஆகும்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செரியன் நகர் பகுதியில் எண்ணூர் – மணலி துறைமுக சாலை விரிவாக்கத்தின் காரணமாக இடம்பெயர்கின்ற 94 குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் தண்டையார்பேட்டை கிராமத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான 3.38 ஏக்கர் நிலப்பரப்பில் அரங்கநாதபுரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீடு ஆணைகளையும், சாலை விரிவாக்கத்தால் இடம் பெயர்கின்ற 94 குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 18 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மறு குடியமர்வு இழப்பீட்டுத் தொகையினையும் வழங்குவதன் அடையாளமாக 5 குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளையும், இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர். வைத்திலிங்கம், அரசு தலைமைக் கொறடா

திரு. ஆர்.மனோகரன், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு ஆர். முருகைய்யா பாண்டியன், தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ஓய்வு), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் - செயலர் திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் ஆர். பழனிச்சாமி, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : **21.7.2015**